## குளித்தலை நகராட்சி

01.06.2018.ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணியளவில் நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்டம்

ஆணையர் மற்றும் தனி அலுவலர்
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. குளித்தலை நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் ஏப்ரல்–2018 மற்றும் மே–2018.ஆம் மாதங்களின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 02. குளித்தலை நகராட்சி பொறியாளர் அவர்களின் ஏப்ரல்–2018 மற்றும் மே–2018.ஆம் மாதங்களின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்– 03. குளித்தலை நகராட்சி எல்லைக்குள் பணிபுரியும் அரசு ஊழியர்கள், உள்ளாட்சி பணியாளர்கள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கான தொழில்வரி தொகையினை ஒவ்வொரு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை உயர்த்திக்கொள்ள அனுமதி வழங்கி வரப்பெற்ற நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் 12.01.1999.ஆம் தேதிய அரசாணை எண்.11.ன்படி, 01.10.2018.ஆம் தேதிமுதல் 25% முதல் 35% வரை தொழில்வரி தொகையினை உயர்த்திக்கொள்ள வரப்பெற்ற 21.05.2018.ஆம் தேதிய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ந.க.12503/2018/ஆர்1 எண்ணிட்ட சுற்றறிக்கை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– தற்போது 01.10.2013.முதல் கீழ்க்காணும் விபரப்படி தொழில்வரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

| 6.மாதத்தில் பெறும் மொத்த வருமானம்(ஊதியம்) | | 01.10.2013.முதல் வசூலிக்கப்படும் தொழில்வரி |
|---|---|---|
| 1) | ரூ.21000/– வரை | இல்லை |
| 2) | ரூ.21001/– முதல் 30000/– வரை | 127 |
| 3) | ரூ.30001/– முதல் 45000/– வரை | 321 |
| 4) | ரூ.45001/– முதல் 60000/– வரை | 633 |
| 5) | ரூ.60001/– முதல் 75000/– வரை | 953 |
| 6) | ரூ.75001/–ம் அதற்குமேல் | 1266 |

கீழ்க்கண்ட வரிசை எண்.1.க்கு தொழில்வரி இல்லை. வரிசை எண்.2 முதல் 5 முடிய உள்ள இனங்களுக்கு 01.10.2018 முதல் 30% உயர்வு செய்யலாம். மேலும், வரிசை எண்.6.க்கு, தொழில்வரி அதிகபட்ச உச்சவரம்பின்படி, ரூ.1250/– என திருத்தி நிர்ணயம் செய்யலாம்.

| 6.மாதத்தில் பெறும் மொத்த வருமானம்(ஊதியம்) | | 01.10.2018.முதல் 30% உயர்வுசெய்தால் வரப்பெறும் தொழில்வரி. |
|---|---|---|
| 1) | ரூ.21000/– வரை | இல்லை |
| 2) | ரூ.21001/– முதல் 30000/– வரை | 165 |
| 3) | ரூ.30001/– முதல் 45000/– வரை | 417 |
| 4) | ரூ.45001/– முதல் 60000/– வரை | 823 |
| 5) | ரூ.60001/– முதல் 75000/– வரை | 1239 |
| 6) | ரூ.75001/–ம் அதற்குமேல் | 1250 |

மேலும், தொழில்வரி உயர்வு குறித்து பொதுமக்கள்அறியும்வண்ணம் நாளிதழில் விளம்பரம் செய்ய உண்டான உத்தேச செலவினத்தொகை ரூ.15000/–க்கு மன்றம் அனுமதிக்கலாம். மேற்காணும் செலவினத்தை பொதுநிதியிலிருந்து அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.240/2017/அ1)

பொருள்– 04. குளித்தலை நகராட்சி சத்தியமங்கலம் உரக்கிடங்கு வளாகத்தில் நாய்கள் இனப்பெருக்க கட்டுப்பாட்டு அறை உபகரணங்கள் சப்ளைசெய்தல் மற்றும் கட்டுமான பணிகள் மேற்கொள்ள, மன்ற தீர்மானம் எண்.17, நாள்–12.02.2018.ல் அனுமதிக்கப்பட்டதன்படி, 13.03.2018.ல் பெறப்பட்ட கீழ்க்கண்ட விபரப்படியான ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண். | பணி விபரம் | ஒப்பந்ததாரர் விபரம் | ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டுடன் ஒப்புநோக்கு % |
|---|---|---|---|
| 1) | சத்தியமங்கலம் உரக்கிடங்கு வளாகத்தில் நாய்கள் இனப்பெருக்க கட்டுப்பாட்டு அறைக்கு உபகரணங்கள் சப்ளைசெய்தல், பெரியார்நகர், நாப்பாளையம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் திரவ குளோரினேசன் பிளாண்ட் அறை அமைத்தல் மற்றும் நவீன இறைச்சிக் கூடத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 1).திரு. M.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், குளித்தலை. | 0.31 % குறைவு |
| | | 2).திரு. R.N.வெங்கடாஜலபதி, ஒப்பந்ததாரர், குளித்தலை. | 1.92 % அதிகம் |

அலுவலக குறிப்பு– 1). வரிசை எண்.1.ல் ஆன மதிப்பீட்டிற்கும் 0.31 % குறைவான திரு.M.செந்தில்குமார், ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.

2). ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்அனுமதிபெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.489/2018/இ1)

பொருள்– 05. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக டெங்கு தடுப்பு நடவடிக்கையாக முதிர்வு கொசுகளை ஒழிப்பதற்கு 2018–2019ம் ஆண்டுக்கு 200 லிட்டர் புகை மருந்து வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூபாய் 3 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.

2). இந்நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1440/2018/எச்1)

*******

**குளித்தலை நகராட்சி**

01.06.2018.ஆம் தேதிய சாதாரணக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 106 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 107 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 108 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 109 | அலுவலக குறிப்பு ஏற்று அனுமதித்து அங்கீகரிக்கப்பட்டது. |
| 5 | 5 | 110 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/– அ.வ.சையத் முஸ்தபா கமால்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.